Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

Q38 Newspapers and journals

பின்வருவனவற்றில் எந்த அறிக்கை "தி ஹிட்டாவாடா" செய்தித்தாளைப் பற்றி தவறானது?

A. அது ஒரு ஆங்கில நாளிதழ்

B. அது கோபால கிருஷ்ண கோகலே அவர்களால் நிறுவப்பட்டது

C. அஅது கதர் இயக்கத்தின் (Ghadar movement) கொள்கையைப் பரப்பும் செய்திதொடர்பாளராக (mouthpiece) இருந்தது ✓

D. அது 1911 ஆம் ஆண்டில் நாக்பூரில் நிறுவப்பட்டது

Q39 Non-Cooperation Movement

பின்வரும் சம்பவங்களில் எது மகாத்மா காந்தியை ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெறத் தூண்டியது?

A. ரவுலட் சட்டத்தை இடைநிறுத்துதல்

B. கிலாபத் இயக்கத்தை திரும்பப் பெறுதல்

C. அலிபூர் வெடிகுண்டு வழக்கு

D. சௌரி-சௌரா சம்பவம் ✓

Q40 Peasant and tribal movements

1838-1848 ஃபராசி இயக்கத்தின் போது, வங்காளத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிரான முதல் வரி-மறுப்பு (no-tax) பிரச்சாரத்தை இணைந்து வழிநடத்தியவர்கள் யார்?

A. சித்து முர்மு மற்றும் கன்ஹு முர்மு

B. ஷரியதுல்லா கான் மற்றும் தாது மியான் ✓

C. டிட்டு மிர் மற்றும் சையத் அகமது பரேல்வி

D. குன்வர் சிங் மற்றும் அமர் சிங்

Q41 Peasant and tribal movements

மஜ்னு ஷா பின்வரும் கிளர்ச்சிகளில் எதனுடன் தொடர்புடையவர்?

A. கோல் கிளர்ச்சி

B. சந்தால் கிளர்ச்சி

C. இண்டிகோ கிளர்ச்சி

D. ஃபாகிர்-சன்னியாசி கிளர்ச்சி ✓

Q42 Peasant and tribal movements

பின்வரும் பிராந்தியங்களில் எந்தப் பகுதியானது, 1842-இல் பூந்தேலாவின் கிளர்ச்சியைக் (Bundela's uprising) கண்டது?

A. விஜயநகரம்

B. ஜபல்பூர் ✓

C. கஞ்சம்

D. சௌராஷ்டிரா

Q43 Peasant movements Gandhian

பின்வரும் முக்கிய தலைவர்களில் யார் பர்தோலி சத்தியாகிரகத்திற்கு (1928) தலைமை தாங்கினார்?

A. கோபாலகிருஷ்ண கோகலே

B. C. ராஜகோபாலாச்சாரி

C. பால கங்காதர திலகர்

D. சர்தார் வல்லபாய் படேல் ✓

Q44 Revolt of 1857

கான்பூரில் 1857 ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சியின் போது நானா சாஹிப்பின் படைகளை வழிநடத்துவதில் மிக முக்கியமான இராணுவப் பங்கை வகித்தவர் யார்?

A. பகதூர் ஷா, நானா சாஹிப்பை தனது ஆளுநராக நியமித்தவர்

B. இரண்டாம் பாஜி ராவ், கடைசி பேஷ்வா மற்றும் நானா சாஹிப்பின் தந்தையார் (Baji Rao II, the last Peshwa and father of Nana Sahib)

C. அஜிமுல்லா, அரசியல் பிரச்சாரத்தில் நிபுணராகத் திகழ்ந்தவர்

D. தாந்தியா தோபே, கொரில்லாப் போர்முறை (guerrilla warfare) மற்றும் தேசப்பற்றுமிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக அறியப்பட்டவர் (Tantia Tope, known for his guerrilla warfare and patriotic resistance) ✓

Q45 Revolt of 1857

இந்தியாவின் முதல் சுதந்திரப் போருக்குப் பிறகு ரங்கூனுக்கு நாடுகடத்தப்பட்டவர் யார்?

A. ராணி லட்சுமிபாய்

B. அஹ்மதுல்லா ஷா

C. பகதூர் ஷா ஜாபர் ✓

D. நானா சாஹிப்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q46 Revolt of 1857

34வது வங்காள பூர்வீக காலாட்படை (Bengal Native Infantry) சிப்பாயாக இருந்த மங்கல் பாண்டேவின் (Mangal Pandey's) போராட்டத்திற்கு வழிவகுத்த புதிய ஆயுதம் எது?

A. மேட்ச்லாக் துப்பாக்கி (Matchlock gun)

B. பிரவுன் பெஸ் மஸ்கட் (Brown Bess musket)

C. ஸ்னைடர் துப்பாக்கி (Snider rifle)

D. என்ஃபீல்ட் துப்பாக்கி (Enfield rifle) ✓

Q47 Revolt of 1857

1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்த பிறகு, பின்வருபவர்களில் வீரர்கள் தங்களை வழிநடத்தத் தேர்ந்தெடுத்த தலைவர் யார்?

A. நானா சாஹிப்

B. மங்கல் பாண்டே

C. பகதூர் ஷா ஜாபர் ✓

D. ராணி லட்சுமிபாய்

Q48 Revolt of 1857

புதிய துப்பாக்கி அமைப்புடன் தொடர்புடைய எந்த நடவடிக்கை இந்திய சிப்பாய்களின் மத நம்பிக்கைகளைப் புண்படுத்தியது மற்றும் 1857 இல் அதிருப்திக்கு முக்கிய காரணமாக அமைந்தது?

A. ராணுவ முகாம்களில் மத ஊர்வலங்களைத் தடை செய்தல்

B. கோயிலுக்குள் நுழைய தடை விதித்தல்

C. விலங்குகளின் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்களை சிப்பாய்கள் தங்கள் பற்களால் கடிக்க கட்டாயப்படுத்துதல் ✓

D. அனைத்து வீரர்களும் ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்திற்குச் செல்வதை கட்டாயமாக்குதல்

Q49 Revolt of 1857

1857-ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்திற்குப் பிறகு, ஆட்சி அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிக்கும் வகையில் ஆங்கிலேயர்களால் நேரடியாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்வாக மாற்றம் எது?

A. வங்காளத்தில் நிரந்தர குடியேற்றம் அறிமுகம்

B. கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரசிக்கு (Crown) அதிகாரம் மாற்றப்படுதல் ✓

C. இந்திய கவுன்சில்கள் சட்டம் 1861 இயற்றப்பட்டது

D. விக்டோரியா மகாராணியின் பிரகடனம் வெளியீடு

Q50 Revolutionary movements

முதலாம் உலகப் போரின் போது கதர் (Ghadar Party's) கட்சியின் புரட்சிகர முயற்சி ஏன் பெரும்பாலும் தோல்வியடைந்தது?

A. பிரிட்டிஷ் உளவுத்துறையின் தலையீடு மற்றும் உள் துரோகம்

B. ஆயுதப் புரட்சி மீது பொதுமக்களின் அக்கறையின்மை ✓

C. சர்வதேச நட்பு நாடுகளின் ஆதரவு இல்லாமை

D. இந்திய தேசிய காங்கிரஸின் வலுவான எதிர்ப்பு

Q51 Revolutionary movements

பின்வருபவர்களில் யாருக்கு காகோரி சதி வழக்கில் (1925) மரண தண்டனை விதிக்கப்படவில்லை?

A. ரோஷன் சிங்

B. அஷ்ஃபகுல்லா கான் (Ashfaqulla Khan)

C. ராஜேந்திர லஹிரி

D. சச்சீந்திர நாத் பக்ஷி (Sachindra Nath Bakshi) ✓

Q52 Social reform movements

பின்வருபவர்களில், 1927 ஆம் ஆண்டு மஹத் சத்தியாகிரகத்தை வழிநடத்திய சுதந்திரப் போராட்ட வீரர் யார்?

A. ஜோதிராவ் புலே

B. K கேளப்பன்

C. B R அம்பேத்கர் ✓

D. E V ராமசாமி நாயக்கர்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q53 Social reform movements

ஜோதிபா புலே 1873 ஆம் ஆண்டு 'சத்யசோதக் சமாஜத்தை' (Satyashodhak Samaj) பின்வரும் இன்றைய எந்த இடத்தில் நிறுவினார்?

A. நாக்பூர்
B. சதாரா
C. நாஷிக்
D. புனே ✓

Q54 Social reform movements

பின்வருவனவற்றில் எது மஹாராஷ்டிராவில் மஹார் இயக்கத்தை சிறப்பாக விவரிக்கிறது?

A. இந்து சடங்குகளைத் தூய்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மதச் சீர்திருத்த இயக்கம்
B. தலித் உரிமைகள் மற்றும் சமூக சமத்துவத்திற்கான சமூக-அரசியல் இயக்கம் ✓
C. ஜமீன்தாரி சுரண்டலுக்கு எதிரான விவசாயிகளின் இயக்கம்
D. பிரிட்டிஷ் வனச் சட்டங்களுக்கு எதிரான பழங்குடியினரின் எழுச்சி

Q55 Social reform organisations

இந்திய தேசிய இயக்கத்தின் போது கல்வி மற்றும் சமூக சீர்திருத்தங்களை மேம்படுத்துவதற்காக 'இந்திய சேவகர்கள் சமூகத்தை' ('Servants of India Society') நிறுவிய பெருமை பின்வருபவர்களில் யாருக்கு உண்டு?

A. கோபால கிருஷ்ண கோகலே ✓
B. தாதாபாய் நவ்ரோஜி
C. பிபின் சந்திர பால்
D. லாலா லஜபதி ராய்

Q56 Social reformers

பின்வரும் சமூக சீர்திருத்தவாதிகளில் யார் 1924 ஆம் ஆண்டில் 'பஹிஷ்கிருத ஹிதகாரிணி சபையை' நிறுவினார்?

A. பாபா ஆம்டே
B. ஜோதிராவ் புலே
C. B R அம்பேத்கர் ✓
D. ஜவஹர்லால் நேரு

Q57 Social reformers

பெண்களின் நலனிற்காக சேவை செய்ய ஆர்ய மகிளா சமாஜத்தை நிறுவிய சமூக சீர்திருத்தவாதி யார்?

A. பண்டித ரமாபாய் ✓
B. தாராபாய் பிரேம்சந்த்
C. மெஹ்ரீபாய் டாடா
D. சரளா தேவி சவுத்ரானி

Q58 Social reformers

பார்சி சமூக சீர்திருத்தவாதியான பெஹ்ராம்ஜி மெர்வான்ஜி மலபாரி, பின்வரும் எந்த சமூக தீமைகள் தொடர்பான சட்டமன்றச் சட்டத்தை (legislative enactment) இயற்றியதற்காகப் பாராட்டப்படுகிறார்?

A. விதவை எரிப்பு அல்லது சதி
B. பெண் சிசுக்கொலை
C. குழந்தைத் திருமணம் ✓
D. தீண்டாமை

Q59 Social reformers

பின்வருபவர்களுள் எந்தத் தலைவர் பிரம்ம சமாஜத்தை (Brahmo Samaj) நிறுவியதிலும் மற்றும் ஒருகடவுள் கோட்பாடு (monotheism) மற்றும் சமூக சீர்திருத்தங்களுக்கு முக்கியத்துவம் ஆகியவற்றுடன் தொடர்புடையவர் ஆவார்?

A. தேவேந்திரநாத் தாகூர்
B. ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்
C. ராஜா ராம் மோகன் ராய் ✓
D. சுவாமி தயானந்த சரஸ்வதி

Q60 Social reformers

பெண் கல்வி மற்றும் உரிமைகளுக்கான அவரது முன்னோடிப் பணிகளுக்காக, "இந்திய பெண்ணியத்தின் தாய்" ("Mother of Indian Feminism") என்று அழைக்கப்பட்டவர் யார்?

A. அன்னி பெசன்ட்
B. சாவித்ரிபாய் புலே ✓
C. பண்டித ரமாபாய்
D. ருக்மாபாய்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q61 Socio-religious reform

கீழ்க்கண்டவர்களில் யார் பிரார்த்தனா சமாஜத்துடன் நேரடியாக தொடர்புடையவர் அல்ல ?

- A. தேபேந்திரநாத் தாகூர் ✓
- B. ஆத்மராம் பாண்டுரங்
- C. மகாதேவ் கோவிந்த் ரானடே
- D. R.C. பண்டார்கர்

Q62 Socio-religious reform

ஆத்மிய சபை குறித்து பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

- A. ஆத்மியா சபை கல்கத்தாவில் நிறுவப்பட்டது
- B. ஆத்மியா சபை பிரம்ம சமாஜத்திற்கான அடித்தளத்தை அமைத்தது
- C. ஆத்மிய சபையை ராஜா ராம் மோகன் ராய் நிறுவினார்
- D. ஆத்மியா சபை 1824இல் நிறுவப்பட்டது ✓

Q63 Swadeshi movement

பின்வருவனவற்றில் பாரிசலில் அஸ்வினி குமார் தத் என்பவார் நிறுவிய சமிதி எது?

- A. ஜுகாந்தர் சமிதி
- B. அனுஷிலன் சமிதி
- C. பாரத் மாதா சமிதி
- D. ஸ்வதேஷ் பந்தப் சமிதி ✓

Q64 Swadeshi movement

சுதேசி இயக்கத்தின் போது, பின்வரும் நிறுவனங்களில் எது அமைக்கப்பட்டது?

- A. பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்
- B. சாந்திநிகேதன்
- C. வங்காள தேசிய கல்லூரி ✓
- D. பெத்தூன் பள்ளி

Q65 Swaraj Party

இந்திய தேசிய காங்கிரசுடன் ஏற்பட்ட முறிவுக்குப் பிறகு, காங்கிரஸ்-கிலாபத் சுயராஜ்யக் கட்சியை இணைந்து நிறுவியதுடன் அதன் தலைவரான தேசியவாதி யார்?

- A. மோதிலால் நேரு
- B. அஜ்மல் கான்
- C. முக்தார் அகமது அன்சாரி
- D. சித்தரஞ்சன் தாஸ் ✓

Q66 Tribal and peasant revolts

பின்வருவனவற்றில் எது ரம்பா கிளர்ச்சியைப் பற்றி தவறானது?

- A. இது வனச் சட்டங்களுக்கும், வட்டிக்கு பணம் கொடுப்போருக்கும் எதிரானது
- B. இதற்கு அல்லூரி சீதாராம ராஜு தலைமை தாங்கினார்
- C. இது இன்றைய மஹாராஷ்டிராவில் நடந்தது ✓
- D. இது கொரில்லா போர் தந்திரங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது

Q67 Tribal and peasant revolts

பூமிஜ் கிளர்ச்சி (Bhumij Revolt) என்றும் அழைக்கப்படும் ஜங்கிள் மஹால் எழுச்சி (Jungle Mahal Uprising) தற்போதைய எந்த மாநிலத்தில் நடந்தது?

- A. பீகார்
- B. மேற்கு வங்காளம் ✓
- C. ஜார்க்கண்ட்
- D. ஒடிசா

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q68 Tribal and peasant revolts

ஒடிஷாவின் பைகா கிளர்ச்சி அதன் பங்கேற்பாளர்களின் சமூகப் பின்னணி மற்றும் பாரம்பரிய செயல்பாடுகளின் அடிப்படையில் ஆரம்பகால காலனித்துவ எதிர்ப்பு கிளர்ச்சிகளில் தனித்துவமாக கருதப்படுவது ஏன்?

- A. இது உள்ளூர் நிர்வாகப் பொறுப்புகளைக் கொண்ட, பரம்பரை போராளிகளால் வழிநடத்தப்பட்டது ✓
- B. வருவாய் சலுகைகளை கோரி பெரிய ஜமீன்தார்களால் இது ஏற்பாடு செய்யப்பட்டது
- C. இது முக்கியமாக நகர்ப்புற கைவினை சங்கங்கள் மற்றும் வர்த்தகர்களால் நடத்தப்பட்டது
- D. இது வெளிநாட்டு கூலிப்படைகளின் ஆதரவைச் சார்ந்திருந்தது

Q69 Tribal and peasant revolts

1830களில் பிரிட்டிஷ் தலையீட்டிற்கு எதிரான காசி கிளர்ச்சிக்கு தலமை ஏற்று வழிநடத்தியவர் யார்?

- A. அல்லூரி சீதாராம ராஜு
- B. சித்து முர்மு
- C. திரோட் சிங் ✓
- D. ராணி கைடின்லியு

Q70 Tribal and peasant revolts

1817-ஆம் ஆண்டு ஒடிசாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆயுதமேந்திய போராட்டமான 'பைக்கா கிளர்ச்சிக்கு' (Paika Rebellion) தலைமை தாங்கியவர் யார்?

- A. சித்து முர்மு
- B. அல்லூரி சீதாராம ராஜு
- C. பக்ஷி ஜகபந்து ✓
- D. சிட்டு சிங்

Q71 Tribal revolts

எந்தக் கிளர்ச்சியில், சித்து மற்றும் கன்ஹு ஆகியோர் தலைமை வகித்ததற்காக வரலாற்று ரீதியாக நினைவுகூரப்படுகிறார்கள்?

- A. சந்தால் கிளர்ச்சி ✓
- B. கோய் கிளர்ச்சி
- C. பரல்கோட் கிளர்ச்சி
- D. பஸ்தார் கிளர்ச்சி

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q1 Agriculture crops

இந்தியாவில் தேயிலை சாகுபடியானது, முக்கியமாக பின்வரும் எந்தப் பிரதேசத்தில் பெருமளவில் உள்ளது?

A. ஆரவல்லி மலைத்தொடர்கள்
B. தார் பாலைவனம்
C. மத்திய தீபகற்பம்
D. வடகிழக்கு மலைத்தொடர்கள் ✓

Q2 Agriculture crops

இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, பின்வரும் எந்த மாநிலம் 2020-2021 இல் இந்தியாவின் முக்கிய நிலக்கடலை ஏற்றுமதி செய்யும் மாநிலமாக இருந்தது?

A. பீகார்
B. மஹாராஷ்டிரா
C. குஜராத் ✓
D. மத்தியப் பிரதேசம்

Q3 Census 2011

2011 ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் எந்த யூனியன் பிரதேசமானது அதிக மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்தது?

A. புதுச்சேரி
B. அந்தமான் நிக்கோபார் தீவுகள்
C. தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி ✓
D. டாமன் மற்றும் டையூ

Q4 Census literacy

2001 மற்றும் 2011-க்கு இடையில், இந்தியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான கல்வியறிவு விகிதத்திற்கான இடைவெளி _____.

A. பூஜ்ஜியமாக மாறியது
B. குறைந்துள்ளது ✓
C. அப்படியே இருந்தது
D. அதிகரித்தது

Q5 Census literacy

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011ன்படி இந்தியாவின் பின்வரும் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் கல்வியறிவு விகிதம் 80% க்கும் அதிகமாக உள்ளது?

A. தமிழ்நாடு மற்றும் அசாம்
B. சிக்கிம் மற்றும் ஒடிசா
C. இமாச்சலப் பிரதேசம் மற்றும் ஹரியானா
D. கோவா மற்றும் திரிபுரா ✓

Q6 Census population

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பின்வரும் எந்த மாநிலம் 2001 மற்றும் 2011 க்கு இடையில் எதிர்மறையான தசாப்த மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தைக் காட்டியது?

A. பஞ்சாப்
B. குஜராத்
C. நாகாலாந்து ✓
D. கேரளா

Q7 Coastal plains

இந்தியாவின் மேற்கு கடற்கரைச் சமவெளியின் தென் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள பெயர் என்ன?

A. மலபார் கடற்கரை ✓
B. கோரமண்டல் கடற்கரை
C. கொங்கண் கடற்கரை
D. கன்னடக் கடற்கரை

Q8 Coastal plains

மேற்கு கடற்கரை சமவெளியின் பின்வரும் பிரிவுகளில் எது, மும்பை மற்றும் கோவாவிற்கும் இடையில் நீண்டுள்ளது?

A. கொங்கன் கடற்கரை ✓
B. மலபார் கடற்கரை
C. கர்நாடகா கடற்கரை
D. கோரமண்டலம் கடற்கரை

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q9 Coastal plains

அரபிக்கடலிலிருந்து குறுகிய தடுப்புத் தீவுகளால் Barrier islands) பிரிக்கப்பட்டுள்ள வேம்பநாடு காயல் (Vembanad Lagoon), இந்தியாவின் எந்தக் கடற்கரைப் பகுதியுடன் தொடர்புடையது?

A. வடக்கு சர்கார்

B. மலபார் கடற்கரை ✓

C. கொங்கன் கடற்கரை

D. கோரமண்டல் கடற்கரை

Q10 Crop production states

பின்வரும் மாநிலங்களில் எது, 2023-24 ஆம் ஆண்டில், இந்தியாவில் இயற்கை ரப்பர் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது?

A. தமிழ்நாடு

B. கர்நாடகா

C. கேரளா ✓

D. ஆந்திரப் பிரதேசம்

Q11 Cropping seasons

இந்தியாவில் கோதுமை முக்கியமாக எந்தப் பருவத்தில் பயிரிடப்படுகிறது?

A. ஜைத்

B. முன் பருவக்காற்று காலம்

C. கரீப்

D. ரபி ✓

Q12 Crops of India

பின்வருவனவற்றுள் முறையே அசாம் மற்றும் கர்நாடகாவில் பயிரிடப்படும் தோட்டப் பயிர்கள் (Plantation crops) எவை?

A. பார்லி மற்றும் ராகி

B. அரிசி மற்றும் கோதுமை

C. தேயிலை மற்றும் காபி ✓

D. கரும்பு மற்றும் கடுகு

Q13 Drainage system

பண்டைய இந்தோ-பிரம்மா நதியானது சிந்து, கங்கை மற்றும் பிரம்மபுத்திரா வடிகால் அமைப்புகளாகப் பிரிந்தது, இது முதன்மையாக எந்தப் புவியியல் நிகழ்வால் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது?

A. பிளைஸ்டோசீன் எழுச்சி ✓

B. அரிப்பு மூலம் ஆற்றின் பிடிப்பு

C. எரிமலை வெடிப்புகள்

D. பனிப்பாறை உருகுதல்

Q14 Economic activities

பின்வருவனவற்றில் மூன்றாம் நிலைச் செயல்பாட்டை அடையாளம் காணவும்.

A. ரியல் எஸ்டேட் ✓

B. பானத் தொழில் (Drink industry)

C. கட்டுமானத் தொழில்

D. உயிரி தொழில்நுட்பம் (Biotechnology)

Q15 Farming systems

விரிநிலை மற்றும் தீவிர (extensive and intensive) விவசாய முறைகளுக்கு இடையிலான முக்கிய வேறுபாடு என்ன?

A. ஒரு நில அலகிற்கான உற்பத்தி ✓

B. இயந்திர வகை

C. விதையின் அளவு

D. பயன்படுத்தப்படும் நீர்ப்பாசனம்

Q16 Glaciers

காரகோரம் மலைத்தொடரில் அமைந்துள்ள எந்த பனிப்பாறை (glacier) ஆனது, இந்த மலைத்தொடரில் மிக நீளமானதும், துருவப் பிரதேசங்களுக்கு வெளியேயுள்ள பனிப்பாறைகளில், உலகின் இரண்டாவது மிக நீளமானதுமாகும்?

A. கங்கோத்ரி பனிப்பாறை

B. பிந்தாரி பனிப்பாறை

C. பால்டோரோ பனிப்பாறை

D. சியாச்சின் பனிப்பாறை ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q17 Hills and mountains

கிட்டத்தட்ட கிழக்கு-மேற்கு நோக்கிச் செல்லும் காரோ, காசி, ஜெயின்டியா மற்றும் நாகா மலைகள், வடக்கு-தெற்கு திசையில் நீண்டு செல்லும் எந்த மலைச் சங்கிலியுடன் இணைக்கப்பட்டுள்ளன?

- A. மிஸோ மற்றும் ராக்கைன் மலைகள் ✓
- B. நீலகிரி மற்றும் ராக்கைன் மலைகள்
- C. மிஸோ மற்றும் விந்திய மலைகள்
- D. சத்புரா மற்றும் மிஸோ மலைகள்

Q18 Himalayan ranges

இந்தியாவில், டிரான்ஸ்-இமயமலைப் பிரதேசத்திற்கு (Trans-Himalayan zone) ஊடே அமைந்துள்ள மலைத்தொடர்கள் யாவை?

- A. மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்குத் தொடர்ச்சி மலைகள், சாத்புரா
- B. இமயமலை, ஆரவல்லி, விந்தியா
- C. ஜான்ஸ்கார், லடாக், காரகோரம் ✓
- D. இமயமலை, சத்புரா, காரகோரம்

Q19 Himalayas

இமயமலையின் எந்தப் பகுதியில் செங்குத்தான உயர வேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றன?

- A. வடக்கு இமயமலைப் பகுதி
- B. மேற்கு இமயமலைப் பகுதி
- C. தெற்கு இமயமலைப் பகுதி
- D. கிழக்கு இமயமலைப் பகுதி ✓

Q20 Himalayas

இமயமலைக்குள் காஷ்மீர், காங்ரா மற்றும் குலு ஆகிய பள்ளத்தாக்குகளை உள்ளடக்கிய மலைத்தொடர் எது?

- A. பெரும் இமயமலை
- B. விந்தியா
- C. ஆரவல்லி
- D. கீழ் இமயமலை ✓

Q21 India neighbours

பின்வரும் நாடுகளில் எது இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் ஒரே ASEAN நாடாக இருப்பதன் மூலம், ASEAN பிராந்தியத்திற்கான இந்தியாவின் நுழைவாயிலாக செயல்படுகிறது?

- A. பூட்டான்
- B. மியான்மர் ✓
- C. பங்களாதேஷ்
- D. நேபாளம்

Q22 India's neighbours

இந்தியாவுடனான எந்த இரண்டு அண்டை நாடுகளின் நில எல்லைகளை இணைத்தால், அது சீனாவின் நில எல்லையை விட நீளமாக இருக்கும்?

- A. பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ✓
- B. நேபாளம் மற்றும் மியான்மர்
- C. பாகிஸ்தான் மற்றும் நேபாளம்
- D. பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தான்

Q23 India's neighbours

இந்தியப் பெருங்கடலில் இலங்கையுடன் இணைந்து இந்தியாவின் தெற்கு அண்டை நாடாக அடையாளம் காணப்படும் தீவு நாடு எது?

- A. பூட்டான்
- B. தாய்லாந்து
- C. இந்தோனேசியா
- D. மாலத்தீவு ✓

Q24 India's neighbours

பின்வருவனவற்றில், எந்த மாநிலம்/யூனியன் பிரதேசமானது, ஆப்கானிஸ்தானுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது?

- A. பஞ்சாப்
- B. லடாக் ✓
- C. ஜம்மு மற்றும் காஷ்மீர்
- D. ராஜஸ்தான்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q25 India's neighbours

பின்வரும் நாடுகளில், இந்தியாவின் வடமேற்கில் மிக அருகிலுள்ள அண்டைநாடு எது?

- A. பாகிஸ்தான் ✓
- B. சீனா
- C. நேபாளம்
- D. பூட்டான்

Q26 Indian climate

பின்வரும் எந்த மாநிலக் குழுக்களில் மாஞ்சாரல் எனப்படுவது (Mango showers) ஏற்படுகின்றது ?

- A. கர்நாடகா மற்றும் கேரளா ✓
- B. ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா
- C. கேரளா மற்றும் தமிழ்நாடு
- D. பீகார் மற்றும் மேற்கு வங்கம்

Q27 Indian climate

இந்தியாவில் தென்மேற்கு பருவமழைக் காலம் _____ ஆகும்.

- A. ஜூலை முதல் டிசம்பர் வரை
- B. ஜூன் முதல் செப்டம்பர் வரை ✓
- C. ஜூன் முதல் நவம்பர் வரை
- D. மே முதல் செப்டம்பர் வரை

Q28 Indian climate

இமயமலையால் தடுக்கப்படும் குளிர் மற்றும் மிகவும் குளிரான காற்று மத்திய ஆசியா மற்றும் பின்வருவனவற்றில் எதற்கு அருகிலுள்ள பகுதிகளிலிருந்து உருவாகிறது?

- A. மத்திய ஆப்பிரிக்கா
- B. ஆர்க்டிக் வட்டம் ✓
- C. மத்திய தரைக்கடல் பிராந்தியம்
- D. பசிபிக் பெருங்கடல்

Q29 Indian monsoon

மே மாத இறுதிக்குள் வட இந்தியாவில் பருவமழை தீவிரமடைவதற்கான முதன்மைக் காரணம் என்ன?

- A. ஈரப்பதம் குறைதல்
- B. பிராந்தியத்தில் அதிக வெப்பநிலை ✓
- C. காற்றோட்ட அமைப்புகளில் மாற்றம்
- D. வளிமண்டல அழுத்தத்தின் அதிகரிப்பு

Q30 Indus river system

சட்லஜ், பியாஸ், ராவி, செனாப் மற்றும் ஜீலம் ஆகிய நதிகள், மிதன்கோட் (Mithankot) அருகே எந்த நதி அமைப்பில் ஒன்றிணைகின்றன?

- A. பிரம்மபுத்திரா
- B. சிந்து ✓
- C. கோதாவரி
- D. கங்கை

Q31 Industrial regions

பின்வருவனவற்றில் இந்தியாவின் சிறு தொழில்துறை பிராந்தியத்திற்கு உதாரணம் எது?

- A. சோட்டா நாக்பூர் பிராந்தியம்
- B. பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு ✓
- C. குஜராத் பிராந்தியம்
- D. ஹுக்லி பிராந்தியம்

Q32 Industries location

சேலம் இரும்பு எஃகு ஆலை (Salem Steel Plant) எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

- A. தமிழ்நாடு ✓
- B. பீகார்
- C. ஜார்க்கண்ட்
- D. கர்நாடகா

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q33 Irrigation methods

இந்தியாவில் எந்த வகையான நீர்ப்பாசனம், தாவரங்களின் வேர் மண்டலத்தில் சொட்டு நீர் வழங்குவதை உள்ளடக்கியது?

A. தெளிப்பு நீர்ப்பாசனம்

B. மேற்பரப்பு நீர்ப்பாசனம்

C. நிலத்தடி நீர்ப்பாசனம்

D. சொட்டு நீர்ப்பாசனம் ✓

Q34 Irrigation methods

உகந்த ஈரப்பதக் கட்டுப்பாடு மற்றும் செயல்திறனுக்காக, உமிழ்ப்பான்களைப் பயன்படுத்தி நேரடியாக வேர்களுக்கு நீரை வழங்கும் நீர்ப்பாசன முறை எது?

A. சொட்டு நீர்ப்பாசனம் ✓

B. தெளிப்பு நீர்ப்பாசனம் (Sprinkler)

C. வெள்ள நீர்ப்பாசனம்

D. ஓவர்ஹெட் (Overhead)

Q35 Islands of India

இந்தியாவில் பின்வரும் எந்தத் தீவுக் குழுவில் பேரன் தீவில் செயல்படும் எரிமலை இருப்பதாக அறியப்படுகிறது?

A. மினிகாய் தீவுகள்

B. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ✓

C. லட்சத்தீவுகள்

D. ராமேஸ்வரம் தீவுகள்

Q36 Islands of India

2025 இல், இரண்டு எரிமலை வெடிப்புகளைக் கண்ட பாரன் தீவு ஆனது, இந்தியாவின் எந்த யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ளது?

A. தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ

B. புதுச்சேரி

C. அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ✓

D. இலட்சத்தீவு

Q37 Islands of India

அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் மொத்த பரப்பளவு தோராயமாக _____.

A. 7,567sq. kms

B. 6,249 sq. kms

C. 5,163 sq. kms

D. 8,249 sq. kms ✓

Q38 Islands of India

பின்வருவனவற்றில் எது அந்தமானை நிக்கோபார் தீவுகளிலிருந்து பிரிக்கிறது?

A. பாக் நீரிணை

B. பத்து பாகை கால்வாய் ✓

C. ஒன்பது பாகை கால்வாய்

D. ஆறு பாகை கால்வாய்

Q39 Lakes of India

சிலிகா (Chilika) ஏரி ஒடிஷாவின் எந்த மூன்று மாவட்டங்களில் பரவியுள்ளது?

A. கட்டாக், பூரி மற்றும் கேந்திரபாரா

B. பூரி, குர்தா மற்றும் கஞ்சம் ✓

C. பூரி, ஜகத்சிங்பூர் மற்றும் குர்தா

D. குர்தா, பாலசோர் மற்றும் கஞ்சம்

Q40 Literacy census

2001 மற்றும் 2011 க்கு இடையில் இந்தியாவின் கல்வியறிவு குறித்து பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

A. ஆண்களின் கல்வியறிவு மற்றும் பெண்களின் கல்வியறிவு ஆகியவை இணையாக உயர்ந்துள்ளன.

B. ஆண்களின் கல்வியறிவு குறைந்துள்ளது, அதே நேரத்தில் பெண்களின் கல்வியறிவு அதிகரித்துள்ளது.

C. பெண்களின் கல்வியறிவை விட ஆண்களின் கல்வியறிவு வேகமாக அதிகரித்துள்ளது.

D. ஆண்களின் கல்வியறிவை விட பெண்களின் கல்வியறிவு வேகமாக அதிகரித்துள்ளது. ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q41 Mineral resources

இந்தியாவின் எந்தப் பீடபூமிப் பகுதி இரும்புத்தாது மற்றும் நிலக்கரி ஆகிய இரண்டிற்கும் மிகவும் பெயர் பெற்றது?

- A. வடகிழக்கு பீடபூமிப் பகுதி ✓
- B. வடமேற்கு பீடபூமிப் பகுதி
- C. மேற்கு-கிழக்கு பீடபூமிப் பகுதி
- D. தென்மேற்கு பீடபூமிப் பகுதி

Q42 Mineral resources

பின்வருவனவற்றில் எது அலோக இயற்கை வளமாகும்?

- A. இரும்புத் தாது
- B. சுண்ணாம்புக்கல் ✓
- C. தங்கம்
- D. தாமிரம்

Q43 Mineral resources

சமீபத்திய தசாப்தங்களில் இந்தியாவில் உயர்-தர கனிம தாதுக்களின் இருப்புக் குறைதலுக்கு எந்தக் காரணி மிகவும் அதிக பங்களித்துள்ளது?

- A. நிலக்கரி அடிப்படையிலான தொழிற்சாலைகளை அதிகமாகச் சார்ந்திருத்தல்
- B. உயர்ரகத் தாதுக்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுரங்கம் தோண்டுதல் ✓
- C. பதப்படுத்தப்படாத கனிமங்களின் ஏற்றுமதி அதிகரிப்பு
- D. சுரங்கத் துறையில் வரையறுக்கப்பட்ட அந்நிய முதலீடு

Q44 Minerals in India

ஜுன்ஜுனு (Jhunjhunu) மற்றும் அல்வார் (Alwar) மாவட்டங்கள் எந்தெந்த கனிமங்களின் உற்பத்திக்காக அறியப்படுகின்றன?

- A. பாக்சைட் (Bauxite)
- B. தங்கம் (Gold)
- C. மைக்கா (Mica)
- D. செம்பு (Copper) ✓

Q45 Monsoon

பின்வருவனவற்றில் எந்த பருவமழை அமைப்பு பின்னடையும் பருவக்காற்று என்றும் அழைக்கப்படுகிறது?

- A. மேற்கத்திய இடையூறுகள்
- B. வடகிழக்குப் பருவமழை ✓
- C. தென்மேற்குப் பருவமழை
- D. முன்னேறும் பருவமழை

Q46 National Waterways

இந்தியாவின் பின்வரும் எந்த தேசிய நீர்வழிப் பாதையில் ஃபராக்கா மிதக்கும் முனையம் அமைந்துள்ளது?

- A. தேசிய நீர்வழிப் பாதை 1 ✓
- B. தேசிய நீர்வழிப் பாதை 2
- C. தேசிய நீர்வழிப் பாதை 5
- D. தேசிய நீர்வழிப் பாதை 3

Q47 National waterways

இந்தியாவின் எந்த நதியில் தேசிய நீர்வழி 57 (NW-57) உருவாக்கப்பட்டது?

- A. சுவாரி நதி
- B. கோபிலி நதி ✓
- C. காளி நதி
- D. கண்டக் நதி

Q48 Natural vegetation

குறிப்பிடப்பட்ட இலையுதிர் காலம் இல்லாததால், இந்தியாவின் எந்த வகைக் காடுகளில் ஆண்டு முழுவதும் பசுமையாகக் காணப்படுகின்றது?

- A. வெப்பமண்டல பசுமைமாறா காடுகள் ✓
- B. மாண்ட்டேன் பைன் காடுகள்
- C. வறண்ட இலையுதிர் காடுகள்
- D. வெப்பமண்டல முள் காடுகள்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q49 Natural vegetation

இந்தியா முழுவதும் இயற்கை தாவரங்களின் பரவலை வடிவமைப்பதில், எந்த பருவநிலை காரணியானது மிக முக்கியமான பங்கை வகிக்கிறது?

A. குத்துயர சரிவு (Altitudinal gradient)

B. சராசரி வருடாந்திர வெப்பநிலை மாறுபாடுகள்

C. வருடாந்திர மழைப்பொழிவு (> 250 cm) ✓

D. மண்ணின் ஊட்டச்சத்து தரம்

Q50 Northern Plains

பின்வரும் மூன்று நதி அமைப்புகளில் எது இந்தியாவின் வடக்கு சமவெளிகள் உருவாவதற்கு முதன்மையான காரணமாக உள்ளது?

A. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ✓

B. நர்மதா, தப்தி, காவேரி

C. கிருஷ்ணா, கோதாவரி, யமுனை

D. மகாநதி, கங்கை, பிரம்மபுத்திரா

Q51 Nuclear power stations

பின்வரும் விருப்பங்களிலிருந்து, இந்தியாவின் தென்கோடியில் உள்ள அணு/அணுக்கரு மின்நிலையத்தை அடையாளம் காண்க.

A. மெட்ராஸ் அணு மின் நிலையம்

B. நரோரா அணு மின் நிலையம்

C. கூடங்குளம் அணு மின் நிலையம் ✓

D. கக்ராபார் அணு மின் நிலையம்

Q52 Nuclear power stations

'கூடங்குளம் அணு மின் நிலையம்' எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. கேரளா

B. கர்நாடகா

C. ஆந்திரப் பிரதேசம்

D. தமிழ்நாடு ✓

Q53 Nuclear power stations

2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, பின்வரும் அணு மின் நிலையங்களில் எது மிக அதிக மின் உற்பத்தித் திறனை (மெகாவாட் மின்சாரம்) கொண்டுள்ளது?

A. கூடங்குளம் அணு மின் நிலையம் ✓

B. நரோரா அணு மின் நிலையம்

C. தாராப்பூர் அணு மின் நிலையம்

D. கக்ராபார் அணு மின் நிலையம்

Q54 Peninsular rivers

"பெரும்பாலான முக்கிய தீபகற்ப ஆறுகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாய்கின்றன" என்ற கூற்றானது, _____ க்கு பொருந்தாது.

A. நர்மதா மற்றும் தாபி ✓

B. காவேரி மற்றும் கிருஷ்ணர்

C. கோதாவரி மற்றும் கிருஷ்ணா

D. மகாநதி மற்றும் காவேரி

Q55 Peninsular rivers

பின்வருவனவற்றில் எது ஒரு தீபகற்ப நதி அல்ல?

A. கங்கை ✓

B. கிருஷ்ணா

C. கோதாவரி

D. நர்மதா

Q56 Physiographic divisions

இந்தியப் பெரும் சமவெளிகளின் பாபர் மற்றும் தராய் மண்டலங்கள் முதன்மையாக எதில் வேறுபடுகின்றன?

A. மண் மற்றும் நிலத்தடி நீர் கிடைப்பதற்கான ஊடுருவும் தன்மை ✓

B. மனிதக் குடியிருப்பு முறைகள்

C. மழைப்பொழிவு மற்றும் காற்றின் திசை

D. இமயமலை ஆறுகளின் தாக்கத்தினால் உருவானவை

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q57 Population census

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பின்வரும் எந்த மாநிலமானது, மிகக் குறைந்த மக்கள்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது?

A. அசாம்

B. ராஜஸ்தான்

C. அருணாச்சலப் பிரதேசம் ✓

D. மிஸோராம்

Q58 Population geography

பின்வருவனவற்றில் எது உண்மையான மக்கள்தொகை வளர்ச்சியின் ஒரு அங்கமாக இல்லை?

A. நகரமயமாக்கல் விகிதம் (Urbanisation rate) ✓

B. பிறப்பு விகிதம்

C. இறப்பு விகிதம்

D. உள்-இடம்பெயர்வு (In-migration)

Q59 Population geography

மக்கள்தொகை ஆய்வுகளில் கச்சா பிறப்பு விகிதம் (crude birth rate) (CBR) எதை அளவிடுகிறது?

A. தலா நூறு பேர்களில் இறந்தவர்களின் இறப்பு விகிதம்

B. பணியிடத்தில் பணிபுரியும் பெண்களின் பங்கு

C. கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு நிகர இடம்பெயர்வு

D. ஆண்டுதோறும் தலா ஆயிரம் பேர்களுக்கு உயிருடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ✓

Q60 Railways transport

2019-2020 ஆம் ஆண்டில் இந்திய ரயில்வேயின் பாதை நீளம் என்ன?

A. 67,415 km

B. 66,935 km

C. 66,918 km

D. 67,956 km ✓

Q61 Regional development planning

நிலத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்க மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Hill Areas Development Programme - HADP) ஆனது எந்த முறையைப் பயன்படுத்துகிறது?

A. தாவரவியல் முறைகள் மற்றும் பயிர்ச் சாகுபடி முறைகளை மாற்றுதல். (Vegetative methods and changing cropping pattern) ✓

B. சமவெளிப் பகுதிகளிலிருந்து அதிக மகசூல் தரும் பயிர்களை இறக்குமதி செய்தல் (Importing high-yielding crops from plain regions)

C. வேதி உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி உள்ளீடுகளின் பயன்பாடு

D. மேம்பட்ட இயந்திரமயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்களின் பயன்பாடு

Q62 Rivers and deltas

பின்வருவனவற்றுள் இந்தியாவின் எந்த ஆறுகள் கிழக்குக் கடற்கரைச் சமவெளிகளில் டெல்டாக்களை உருவாக்குகின்றன?

A. கோதாவரி ✓

B. தபி

C. மஹி

D. நர்மதா

Q63 Rivers and deltas

பின்வருவனவற்றில் எந்த ஆற்றின் டெல்டா கிழக்கு கடற்கரைச் சமவெளியில் அமையவில்லை?

A. மகாநதி

B. தபதி ✓

C. கிருஷ்ணா

D. கோதாவரி

Q64 Shifting cultivation

பின்வரும் எந்த மாநிலத்தில், 'குருவா' ('Kuruwa') என்று அழைக்கப்படும் வெட்டி எரித்தல் விவசாய முறை உள்ளது?

A. மத்தியப் பிரதேசம்

B. அருணாச்சலப் பிரதேசம்

C. ஜார்க்கண்ட் ✓

D. ராஜஸ்தான்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q65 Soils of India

இந்தியாவில் பருத்திச் சாகுபடிக்கு (Cotton cultivation) மிகவும் ஏற்ற மண் வகை எது?

A. செம்மண் (Red soil)

B. சரளை மண் (Laterite soil)

C. வண்டல் மண் (Alluvial soil)

D. கரிசல் மண் (Black soil) ✓

Q66 Soils of India

இந்தியாவின் வண்டல் மண் (Alluvial Soils) குறித்த கீழ்க்கண்ட கூற்றுகளில் எது அதன் பண்பு அல்ல?

A. முதன்மையாக தக்காண பீடபூமியில் காணப்படுகிறது ✓

B. மிகவும் வளமானது

C. இது முக்கியமாக மணல், வண்டல் மற்றும் களிமண் ஆகியவற்றைக் கொண்டுள்ளது

D. பொட்டாஷ் சத்து அதிகமாகக் காணப்படுகிறது.

Q67 Soils of India

மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகளில், கரிசல் மண்ணின் அதிகப்படியான ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் திறன், பயிர்ச் சாகுபடித் தீவிரத்தை (cropping intensity) எவ்வாறு பாதிக்கிறது

A. இது ஆழமான வேர் வளர்ச்சிக்குத் துணைபுரிவதால், உணவுப் பயிர்களை விடத் தோட்டப் பயிர்களைப் பயிரிடுவதை ஊக்குவிக்கிறது

B. இது அனைத்துப் பருவங்களிலும் ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்வதன் மூலம் பலமுறை பயிர்ச் சாகுபடி செய்யும் முறைக்கு வழிவகுக்கிறது

C. நீர் தேங்கி நிற்பதைத் தடுக்க இது பயிர் சாகுபடியை ஒரே பருவத்திற்கு மட்டுமே கட்டுப்படுத்துகிறது ✓

D. நிலையான ஊட்டச்சத்து அளவுகள் காரணமாக பயிர் சுழற்சியின் தேவையை இது குறைக்கிறது

Q68 Tertiary sector regions

அதிக மக்கள் தொகை மற்றும் நகர்ப்புற மையங்கள் போன்றவை இருந்தபோதிலும் முறையான மூன்றாம் நிலைத் துறையில் (Formal Tertiary Sector) மிகக்குறைந்த பங்களிப்பைக் கொண்டுள்ள இந்தியப் பகுதி எது?

A. தென்னிந்தியா

B. வடகிழக்கு இந்தியா ✓

C. மேற்கு இந்தியா

D. வட இந்தியா

Q69 Thar desert

தார் பாலைவனமானது _____ என்றும் அழைக்கப்படுகிறது.

A. கிரேட் வெள்ளைப் பாலைவனம்

B. கிரேட் உப்புப் பாலைவனம்

C. கிரேட் டெக்கான் பாலைவனம்

D. கிரேட் இந்தியப் பாலைவனம் ✓

Q70 Transport geography

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட போக்குவரத்து வழித்தடங்கள் சந்திக்கும் இடங்களைக் குறிக்க பின்வரும் எந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது?

A. லிங்க் (Link)

B. கிரிட் (Grid)

C. நெட்வொர்க்(Network)

D. நோடு (Node) ✓

Q71 Transport infrastructure

தங்க நாற்கரச் சாலை (The Golden Quadrilateral) எந்த நகரங்களை இணைக்கிறது?

A. தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா ✓

B. தில்லி, போபால், அகமதாபாத், மும்பை

C. மும்பை, புனே, ஹைதராபாத், பெங்களூரு

D. சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், கொல்கத்தா

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q72 Types of agriculture

நவீன விவசாய மாற்றங்கள் இருந்தபோதிலும் இந்தியாவில் எந்த வகையான விவசாயம் இன்னும் பரவலாக நடைமுறையில் உள்ளது?

- **A.** வாழ்வாதார வேளாண்மை (Subsistence Agriculture) ✓
- **B.** வணிக வேளாண்மை (Commercial Agriculture)
- **C.** இயற்கை வேளாண்மை (Organic Agriculture)
- **D.** தோட்ட வேளாண்மை (Plantation Agriculture)

Q73 Types of agriculture

பின்வருவனவற்றில், இந்தியாவில் விவசாய பன்முகத்தன்மைக்கு (farming variety) பங்களிக்காத காரணி எது?

- **A.** நீர்ப்பாசன வசதி
- **B.** சீரான நிலவமைப்பு ✓
- **C.** மண் வகைகள்
- **D.** காலநிலை

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q1 Economic activities

US இன் பொருளாதாரத்திற்கு, பின்வரும் எந்தத் துறையானது மிக அதிகப்படியான பங்களிப்பை வழங்குகிறது?

A. இரண்டாம் நிலைச் செயல்பாடு
B. நான்காம் நிலைச் செயல்பாடு
C. முதன்மை நிலைச் செயல்பாடு
D. மூன்றாம் நிலைச் செயல்பாடு ✓

Q2 International waterways

இது மத்தியதரைக் கடலை செங்கடலுடன் இணைக்கின்றது மற்றும் உலக வர்த்தகத்திற்கு மிகவும் முக்கியமான சர்வதேச நீர்வழிப்பாதை ஆகும். அது எது?

A. மலாக்கா ஜலசந்தி
B. பாஸ்பரஸ் ஜலசந்தி
C. சூயஸ் கால்வாய் ✓
D. பனாமா கால்வாய்

Q3 Latitudes and continents

பின்வரும் கண்டங்களில் எது பூமத்திய ரேகையால் கடக்கப்படவில்லை?

A. ஆசியா
B. ஆப்பிரிக்கா
C. தென் அமெரிக்கா
D. ஐரோப்பா ✓

Q4 Natural regions

டைகா வகை மண்டலம் (Taiga Type region)-ஆனது, எந்த முக்கிய இயற்கைப் பிரதேசமாகச் சிறப்பாக விவரிக்கப்படுகிறது?

A. குளிர் பாலைவனப் பிரதேசம் (Cold Deserts Region)
B. ஊசியிலைக் காடுகள் மண்டலம் (Coniferous Forests Region) ✓
C. குளிர் மிதவெப்ப மண்டல புல்வெளிப் பிரதேசம் (Cool Temperate Grassland Region)
D. நிலநடுக்கோட்டுத் தாழ்நிலப் பிரதேசம் (Equatorial Lowland Region)

Q5 Population distribution

புவியியல் காரணிகளின் அடிப்படையில் பின்வருவனவற்றுள் எந்தப் பகுதியானது அதிக மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்டிருக்கலாம் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

A. பிரேசிலில் உள்ள அமேசான் மழைக்காடுகள்
B. இந்தியாவில் உள்ள கங்கை நதி வடிநிலம் ✓
C. ஆப்பிரிக்காவில் உள்ள சஹாரா பாலைவனம்
D. கனேடிய ஆர்க்டிக் துந்தரா

Q6 Population distribution

ஐக்கிய நாடுகள் சபையின் உலக மக்கள்தொகை வாய்ப்புகள் (United Nations World Population Prospects) (2019) படி, 2050 ஆம் ஆண்டுக்குள் உலக மக்கள்தொகை வளர்ச்சிக்கு எந்தப் பிராந்தியம் மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்றும், இதன் மூலம் எதிர்கால மக்கள்தொகை அடர்த்தி போக்குகளைப் பாதிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது?

A. ஐரோப்பா வட அமெரிக்கா
B. கிழக்கு தென்கிழக்கு ஆசியா
C. துணை சஹாரா ஆப்பிரிக்கா ✓
D. லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்

Q7 Population distribution

2024-இன் உலக மக்கள் தொகை ஆய்வறிக்கையின்படி, உலகின் பின்வரும் எந்தப் பகுதி மிக அதிக மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது?

A. வட அமெரிக்கா (North America)
B. தெற்கு-மத்திய ஆசியா (South-Central Asia) ✓
C. மேற்கு ஐரோப்பா (Western Europe)
D. மத்திய ஆப்பிரிக்கா (Central Africa)

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q8 River basins

உலகின் அறியப்பட்ட பல்லுயிர் பெருக்கத்தில் (global biodiversity) 10% க்கும் அதிகமான உயிரினங்களைக் கொண்டுள்ள மற்றும் உலகின் வேறு எங்கும் காணப்படாத பல தனித்துவமான சிற்றினங்களின் தாயகமாக விளங்கும் பேசின் எது?

A. டான்யூப் பேசின்

B. அமேசான் பேசின் ✓

C. மிசிசிப்பி பேசின்

D. நைல் பேசின்

Q9 World climate regions

பழங்கள், காய்கறிகள் மற்றும் திராட்சைத் தோட்டங்களின் சாகுபடிக்கு உகந்த மத்திய தரைக்கடல் காலநிலையை (mediterranean climate) கொண்டுள்ள U.S. மாநிலம் எது?

A. அலாஸ்கா

B. டெக்சாஸ்

C. புளோரிடா

D. கலிபோர்னியா ✓

Q10 World crops

மணிலா சணல், _____ இல் காணப்படுகிறது.

A. பிலிப்பைன்ஸ் ✓

B. இந்தோனேசியா

C. மலேசியா

D. ஜப்பான்

Q11 World transport routes

ரஷ்யாவின் டிரான்ஸ்-சைபீரியன் ரயில்வேயின் முக்கிய ரயில் பாதையானது, மேற்கில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து, கிழக்கில் பசிபிக் கடற்கரை மீதமைந்துள்ள _____ வரை செல்கிறது.

A. நோவோசிபிர்ஸ்க்

B. இர்குடாஸ்க்

C. மாஸ்கோ

D. விளாடிவோஸ்டாக் ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q1 Climatic zones

வெப்பமண்டல காலநிலை மண்டலமானது, பூமியின் முக்கியமாக எந்த அட்சரேகைப் பகுதியில் அடங்கியுள்ளது?

- A. 23.5°N மற்றும் 23.5°S ✓
- B. 28.5°N மற்றும் 28.5°S
- C. 13.5°N மற்றும் 13.5°S
- D. 30.5°N மற்றும் 30.5°S

Q2 Cyclones

கடலோரப் பகுதிகளில் வெப்பமண்டல புயல்களின் முக்கிய அழிவு சக்தி என்ன?

- A. குறைந்த வளிமண்டல அழுத்தம்
- B. அதிக வெப்பநிலை
- C. தொடர் மழைப்பொழிவு
- D. புயல் எழுச்சி ✓

Q3 Earth's interior

பூமியின் உட்பகுதியில், மேலோடு (mantle) மற்றும் கருவம் (core) ஆகியவற்றிற்கு இடையேயான எல்லையானது சுமார் எவ்வளவு ஆழமாகும்?

- A. 2,900 km ✓
- B. 3,900 km
- C. 4,900 km
- D. 1,900 km

Q4 El Nino

பசிபிக் பெருங்கடலில் நிலவும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பும், அதனுடன் தொடர்புடைய இந்தியாவின் மழையளவு பற்றாக்குறை ஆவது ஆகியவை பின்வரும் எந்த நிகழ்வுடன் தொடர்புடையது?

- A. சா நினா (Sa Nina)
- B. எல் நினோ (El Nino) ✓
- C. சி நினா (Chi Nina)
- D. புரோ நினோ (Pro Nino)

Q5 Factors affecting climate

இவை இரண்டும் கிட்டத்தட்ட ஒரே அட்சரேகையில் அமைந்திருந்தாலும், கோயம்புத்தூரை விட ஊட்டியில் குளிர்ந்த கோடைகாலத்தை ஏற்படுத்துவதற்கான காரணிகள் யாவை?

- A. ஊட்டி ஆனது அதிக உயரத்தில் அமைந்துள்ளது, இது குறைந்த வெப்பநிலைக்கு வழிவகுக்கிறது ✓
- B. வடக்கிலிருந்து வரும் குளிர்ந்த பாலைவனக் காற்றால் ஊட்டி பாதிக்கப்படுகிறது
- C. ஊட்டி கடலுக்கு அருகில் அமைந்துள்ளது, கோயம்புத்தூர் உள்நாட்டில் உள்ளது
- D. கோயம்புத்தூர் ஆண்டு முழுவதும் குறைவான சோலார் ரேடியேஷனைப் பெறுகிறது

Q6 Glacial landforms

ஒரு பனிப்பாறை, ஏற்கனவே இருக்கும் ஆற்றுப் பள்ளத்தாக்கை அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் மற்றும் மென்மையாக்குதல் மூலம் அரிக்கும்போது _____ நிலப்பரப்பு உருவாகிறது,

- A. V-வடிவ பள்ளத்தாக்கு ✓
- B. வெள்ளச் சமவெளி
- C. கார்ஜ் (Gorge)
- D. U-வடிவ பள்ளத்தாக்கு

Q7 Interior of Earth

பூமியின் காந்தப்புலத்தை உருவாக்குவதில் முதன்மைப் பங்கு வகிக்கும் அடுக்கு _____ ஆகும்.

- A. மேன்டில்
- B. கிரஸ்ட்
- C. வெளிப்புற மையப்பகுதி (Outer core) ✓
- D. உள் மையப்பகுதி (Inner core)

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q8 Koppen climate

குறுகிய மழைக்காலம் மற்றும் நீண்ட, கடுமையான வறண்ட காலம் ஆகியவற்றால் அடையாளம் காணப்படும் கோப்பன் துணை காலநிலை வகை எது?

A. Am துணை காலநிலை வகை

B. Af துணை காலநிலை வகை

C. Aw துணை காலநிலை வகை ✓

D. BSh துணை காலநிலை வகை

Q9 Mountain formation

இமயமலை போன்ற மடிப்பு மலைகள் (fold mountains) உருவாவதற்கு பின்வரும் செயல்முறைகளில் எது/எவை முதன்மையாக காரணமாகிறது?

A. காற்று டேபோசிசன் (Wind deposition)

B. ஆறுகளால் ஏற்படும் அரிப்பு

C. எரிமலை வெடிப்புகள்

D. தட்டு மோதல் (Plate collision) ✓

Q10 Natural disasters

மலைச்சரிவுகளில் இருந்து பனி, பனிக்கட்டி மற்றும் பாறைகள் பெருமளவில் கீழ்நோக்கிச் சரிந்து வரும் இயற்கை பேரிடர் எது?

A. சூறாவளி

B. சுனாமி

C. நிலச்சரிவு (Landslide)

D. பனிச்சரிவு (Avalanche) ✓

Q11 Ocean currents

பின்வருவனவற்றில் எந்தப் பெருங்கடலில் கேனரி நீரோட்டம் நிகழ்கிறது?

A. தெற்குப் பெருங்கடல்

B. அட்லாண்டிக் பெருங்கடல் ✓

C. இந்தியப் பெருங்கடல்

D. பசிபிக் பெருங்கடல்

Q12 Ocean currents

வெப்பமண்டலப் பகுதிகளிலிருந்து வெதுவெதுப்பான நீரைக் கடத்திச் செல்வதன் மூலம், மேற்கு ஐரோப்பாவின் காலநிலையை மிதப்படுத்துவதற்கு, எந்த கடல் நீரோட்டமானது முதன்மைப் பொறுப்பாகும்?

A. ஓயாஷியோ நீரோட்டம்

B. வடக்கு அட்லாண்டிக் நீரோட்டம் ✓

C. ஹம்போல்ட் நீரோட்டம்

D. கேனரி நீரோட்டம்

Q13 Rivers and drainage

பின்வருவனவற்றுள் எது 'துணை ஆறு' என்ற வார்த்தையின் சரியான வரையறை ஆகும்?

A. முதன்மை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஆறு

B. கடல் நீரும் ஆற்று நீரும் வந்து கலக்கும் பகுதி

C. ஒரு பெரிய ஆற்றுடன் வந்து கலக்கும் சிறிய ஆறு ✓

D. ஆற்றின் முகத்துவாரத்தில் ஒரு ஏரி

Q14 Solstice and latitudes

கோடைகால கதிர்த்திருப்பத்தின் (Summer Solstice) போது, சூரியனின் செங்குத்துக் கதிர் எந்த அட்சரேகையின் மீது விழுகின்றது?

A. மகர ரேகை

B. பூமத்திய ரேகை

C. கடக ரேகை ✓

D. ஆர்க்டிக் வட்டம்

Q15 Volcanoes

அடுக்கு அமைப்பு காரணமாக எந்த எரிமலை வகை ஆனது ஸ்ட்ராடோவோல்கானோ என்றும் அழைக்கப்படுகிறது?

A. கூட்டு எரிமலை (Composite volcano) ✓

B. ஷீல்ட் எரிமலை (Shield volcano)

C. சிண்டர் கூம்பு எரிமலை (Cinder cone volcano)

D. பிளவு எரிமலை (Fissure volcano)

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q16 Volcanoes

அடிக்கடி எரிமலை வெடிப்பு ஏற்படுவதால் எந்தப் பகுதி "நெருப்பு வளையம்" (Ring of Fire) என்று அழைக்கப்படுகிறது?

A. இந்தியப் பெருங்கடல் தரைத்தளம்

B. கிழக்கு ஆப்பிரிக்க ரிஃப்ட்

C. பசிபிக் பெருங்கடல் விளிம்பு ✓

D. மத்திய அட்லாண்டிக் ரிட்ஜ்

Q17 Weather and climate

காலநிலை அறிவியலில், ஒரு குறிப்பிட்ட இடத்தில், பருவகால நிலைமைகள் எவ்வாறு உணரப்படுகின்றன என்பதை, மிகத் துல்லியமாக விளக்குவது எது?

A. அந்தப் பகுதியின் நிரந்தர காலநிலை வகைப்பாடு

B. அந்தப் பகுதியின் நீண்டகால சராசரி வளிமண்டல வடிவங்கள் ✓

C. அவ்விடத்தின் அட்சரேகை நிலை

D. வளிமண்டல தனிமங்களின் குறுகிய கால ஏற்ற இறக்கங்கள்

Q18 Weather and climate

வானிலைக்கும் காலநிலைக்கும் (weather and climate) இடையிலான வேறுபாட்டை, பின்வருவனவற்றுள் எது சிறப்பாக விளக்குகிறது?

A. வானிலை மற்றும் காலநிலை என்பது ஒரே நிகழ்வைக் குறிக்கிறது

B. வானிலை என்பது நீண்ட கால போக்குகளைக் குறிக்கிறது; காலநிலை என்பது குறுகிய கால மாற்றங்களைக் குறிக்கிறது

C. வானிலை இயற்கையில் நிரந்தரமானது; காலநிலை இயற்கையில் தற்காலிகமானது

D. வானிலை என்பது குறுகிய கால மாற்றங்களைக் குறிக்கிறது; காலநிலை என்பது நீண்ட கால அமைப்புகளைக் குறிக்கிறது ✓

Q19 Weathering and landforms

கார்ஸ்ட் நிலத்தோற்றங்கள் (karst landscapes) உருவாவதற்கு பின்வருவனற்றுள் எந்த வகையான வெதெரிங் முக்கிய காரணமாக அமைகிறது?

A. இயந்திர வெதெரிங்

B. வெப்ப வெதெரிங்

C. உயிரியல் வெதெரிங்

D. வேதியியல் வெதெரிங் ✓

Q20 Winds and pressure

பூமியின் சுழற்சியால் ஏற்படும் பின்வரும் வெளிப்படை விசைகளில் எது, காற்றை வட அரைக்கோளத்தில் வலதுபுறமாகவும், தென் அரைக்கோளத்தில் இடதுபுறமாகவும் திசைதிருப்புகிறது?

A. கோரியோலிஸ் விசை (Coriolis force) ✓

B. ஈர்ப்பு விசை

C. அழுத்த சரிவு விசை (அழுத்தச்சரிவு விசை)

D. உராய்வு விசை

Q21 Winds and pressure

ஆண்டு முழுவதும், உயர் அழுத்தப் பகுதிகளிலிருந்து குறைந்த அழுத்தப் பகுதிகளுக்கு எந்தக் காற்று மண்டலமானது தொடர்ந்து வீசுகிறது?

A. பருவக் காற்றுகள்

B. உள்ளூர் காற்று

C. கோள் காற்று (Planetary winds) ✓

D. துருவக் காற்று (Polar winds)

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q1 Anti-defection law

52வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1985 ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ், எந்த நடவடிக்கை ஆனது ஒரு சுயேச்சை MP யை தகுதி நீக்கம் செய்கிறது?

A. கட்சியின் கொறடா உத்தரவை மீறி வாக்களித்தல்

B. கூட்டணி அரசுக்கு ஆதரவு அளித்தல்

C. தேர்தலுக்குப் பிறகு எந்த ஒரு அரசியல் கட்சியிலும் சேருதல் ✓

D. விவாதங்களின் போது நடுநிலையாக இருத்தல்

Q2 Centre-State relations

ஒருங்கியல் பட்டியலில் (concurrent List) உள்ள ஒரு துறையில், மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டத்திற்கும் நாடாளுமன்றத்தின் சட்டத்திற்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால், அதன் சட்டப்பூர்வ முடிவு என்னவாக இருக்கும்?

A. இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் தீர்க்கப்படுகிறது

B. மாநிலச் சட்டம் தானாகவே மத்தியச் சட்டத்தை மீறுகிறது

C. மாநிலச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இல்லாவிட்டால், மத்தியச் சட்டம் மாநிலச் சட்டத்தை மீறும் ✓

D. மாநிலச் சட்டத்தை ரத்து செய்ய நாடாளுமன்றம் கடமைப்பட்டுள்ளது

Q3 Centre-State relations

பின்வரும் கூற்றுகளில் எது சரியானது அல்ல?

A. மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீது ஒரு மாநிலச் சட்டமன்றம் வரி விதிக்க முடியாது. (A state legislature can not impose tax on the consumption or sale of electricity.) ✓

B. சட்டப்பிரிவு 282, மத்திய மற்றும் மாநில அரசுகள் தங்களின் சட்டமியற்றும் அதிகார வரம்பிற்குள் இல்லாவிட்டாலும் கூட, எந்தவொரு பொது நோக்கத்திற்காகவும் மானியங்களை வழங்க அதிகாரம் அளிக்கிறது. (Article 282 empowers both the Centre and the states to make any grants for any public purpose, even if it is not within their respective legislative competence.)

C. பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது அவ்விரண்டின் விநியோகமானது மாநிலத்திற்கு வெளியே நடைபெறும் இடங்களிலோ அல்லது ஏற்றுமதி அல்லது இறக்குமதியின் போதோ நடைபெறும் போது, அதன் மீது வரி விதிக்க மாநில சட்டமன்றத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது

D. மாநிலச் சட்டமன்றம் தொழில், வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பணிகளின் மீது வரிகளை விதிக்க அதிகாரம் பெற்றுள்ளது.

Q4 Centre-state relations

மத்திய - மாநில நிதி உறவுகள், இந்தியாவின் ஆளுமையில் (Governance) எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?

A. மாநிலங்களுக்கு தடையற்ற நிதி ஆதாரங்களை வழங்குவதன் மூலம்

B. அனைத்து வரி வருவாய்களையும் மத்திய அரசிடம் மையப்படுத்துவதன் மூலம்

C. நிதி ஆணையம் போன்ற வழிமுறைகள் வழியாக வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் ✓

D. மாநில வரவுசெலவுத் திட்டங்களின் தேவையை களைவதன் மூலம்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play
generated by rank.qmaths.in

Q5 Centre-state relations

குறிப்பிட்ட விவகாரங்களில் மாநில அரசுக்கு வழிகாட்டுதல்களை வழங்க இந்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு (Constitutional provision) எது?

A. சட்டப்பிரிவு 265

B. சட்டப்பிரிவு 262

C. சட்டப்பிரிவு 248

D. சட்டப்பிரிவு 256 ✓

Q6 Citizenship

குடியுரிமைச் சட்டம், 1955 இன்படி, டிசம்பர் 10, 1992 அன்று அல்லது அதற்குப் பிறகு, இந்தியாவிற்கு வெளியே பிறந்த ஒரு நபர், _____ இருந்தால், வம்சாவளியால் இந்தியக் குடிமகனாக கருதப்படுவார்.

A. தந்தை மட்டுமே இந்தியக் குடிமகனாக

B. தாய் மட்டுமே இந்தியக் குடிமகளாக

C. பிறக்கும் போது பெற்றோர் இருவரும் இந்தியாவில் வழக்கமாக வசிப்பவராக

D. பிறக்கும் போது பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாக ✓

Q7 Citizenship articles

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலாவதற்கு முன்பு, பாகிஸ்தானில் இருந்து குடிபெயர்ந்தவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான சட்டப்பிரிவு எது?

A. சட்டப்பிரிவு 8

B. சட்டப்பிரிவு 6 ✓

C. சட்டப்பிரிவு 5

D. சட்டப்பிரிவு 10

Q8 Citizenship articles

குடியுரிமைச் சட்டம், 1955 இன் கீழ், ஒரு புதிய நிலப்பகுதி இந்தியாவின் ஒரு பகுதியாக மாறும்போது குடியுரிமை வழங்குவதை எந்தப் பிரிவு நிர்வகிக்கிறது?

A. பிரிவு 6

B. பிரிவு 9

C. பிரிவு 7 ✓

D. பிரிவு 5

Q9 Citizenship articles

இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது, எந்தச் சட்டப் பிரிவுகள் குடியுரிமை (Citizenship) பற்றிய விதிகளை விளக்குகின்றன?

A. சட்டப்பிரிவு 12 முதல் 18 வரை

B. சட்டப்பிரிவு 14 முதல் 24 வரை

C. சட்டப்பிரிவு 1 முதல் 4 வரை

D. சட்டப்பிரிவு 5 முதல் 11 வரை ✓

Q10 Citizenship articles

அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு, ஒரு இந்தியக் குடிமகன் தானாக முன்வந்து தம் விருப்பமாக ஒரு வெளிநாட்டுக் குடியுரிமையைபெற்றால் அதன் சட்டப்பூர்வ விளைவு என்ன?

A. நிபந்தனைகளுக்கு உட்பட்டு குடியுரிமை தக்கவைக்கப்படுகிறது

B. இந்தியக் குடியுரிமை மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

C. இரட்டைக் குடியுரிமை அனுமதிக்கப்படுகிறது

D. அவன்/அவள் இந்தியக் குடிமகனாக இருப்பது முடிவுக்கு வருகிறது ✓

Q11 Citizenship articles

ஜனவரி 26, 1950 முதல் ஜூலை 1, 1987 வரை இந்தியாவில் பிறந்த ஒரு நபர், எந்தக் காரணங்களுக்காக தானாகவே இந்தியக் குடிமகனாகக் கருதப்படுகிறார்?

A. குடிமையாக்கம் (naturalisation)

B. குடிவழி (descent)

C. பதிவு (registration)

D. பிறப்பு (birth) ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q12 Citizenship provisions

நாட்டின் நலன்களுக்கு எதிராக செயல்பட்டதற்காக இந்திய அரசு ஒரு தனிநபரின் குடிமையை ரத்து செய்தால், எந்த அரசியலமைப்பு அல்லது சட்டரீதியான விதி அவ்வாறு செய்ய அதிகாரம் அளிக்கிறது?

A. 1955 இன் இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 6A ஆம் பிரிவு

B. அரசியலமைப்பின் 5ஆம் சட்டப்பிரிவு

C. 1955 இன் இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு ✓

D. அரசியலமைப்பின் 11ஆம் சட்டப்பிரிவு

Q13 Citizenship provisions

அரசியலமைப்பின் பகுதி II யில் உள்ள எந்த வகையம், குடியுரிமைக்கான ஒரு அடிப்படையானது, குறிப்பாக ஒரு நபரின் பெற்றோரில் ஒருவராகக் கொண்டவர் இந்தியாவில் பிறந்தவர்கள் என்பதை வரையறுக்கிறது?

A. சட்டப்பிரிவு 6

B. சட்டப்பிரிவு 5 ✓

C. சட்டப்பிரிவு 8

D. சட்டப்பிரிவு 9

Q14 Citizenship provisions

குடியுரிமை திருத்தச் சட்டம், 2019, பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தான் அல்லது வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இருந்து 31 டிசம்பர் 2014-க்கு முன்பு இந்தியாவுக்குள் நுழைந்தால் எந்த சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்களுக்கு குடியுரிமையை வழங்குகிறது?

A. இந்து, சீக்கியர், பௌத்தர், சமணர், பார்சி, கிறிஸ்தவர் ✓

B. சீக்கியர், கிறிஸ்தவர், இந்து, சமணர் மட்டும்

C. முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி, சீக்கியர்

D. இந்து, முஸ்லீம், சமணர், பார்சி

Q15 Citizenship provisions

டிசம்பர் 3, 2004 க்குப் பிறகு இந்தியாவிற்கு வெளியே பிறந்த ஒரு நபர், குடிவழியால் இந்தியக் குடிமகனாகக் கருதப்படுவதற்கு என்ன நிபந்தனையை பூர்த்தி செய்ய வேண்டும்?

A. அவர்கள் இந்தியாவில் 10 ஆண்டுகள் வசிக்க வேண்டும்

B. அவர்கள் வேறு எந்த குடியுரிமையையும் கைவிட வேண்டும்

C. பெற்றோர் இருவரும் இந்திய குடிமக்களாக இருக்க வேண்டும் ✓

D. அவர்கள் குறைந்தது 5 ஆண்டுகள் இந்தியாவில் வசிக்க வேண்டும்

Q16 Citizenship provisions

இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பிறகு இந்திய குடியுரிமையைப் பெறுதல் மற்றும் குடியுரிமையை அறுதல் (acquisition and termination) தொடர்பான சட்டங்களை உருவாக்க இந்திய நாடாளுமன்றத்திற்கு எந்த அரசியலமைப்புச் சட்டப்பிரிவு அதிகாரம் அளிக்கிறது?

A. சட்டப்பிரிவு 8

B. சட்டப்பிரிவு 6

C. சட்டப்பிரிவு 11 ✓

D. சட்டப்பிரிவு 5

Q17 Constitutional amendments

அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் தொடர்பான அரசியலமைப்புத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிறகு, அது சட்டமாக மாறுவதற்கு அடுத்த கட்டாய அரசியலமைப்பு நடவடிக்கை என்ன?

A. மாநில சட்டப்பேரவைகளின் அங்கீகாரம்

B. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் ✓

C. அரசிதழில் அறிவிப்பு

D. உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதல்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q18 Constitutional amendments

எந்த அரசியலமைப்பு திருத்தச் சட்டம் போடோ, டோக்ரி, மைதிலி மற்றும் சந்தாலி ஆகியவற்றை இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சேர்த்தது?

A. 91வது திருத்தச் சட்டம், 2003

B. 86வது திருத்தச் சட்டம், 2002

C. 93வது திருத்தச் சட்டம், 2005

D. 92வது திருத்தச் சட்டம், 2003 ✓

Q19 Constitutional amendments

எந்த அரசியலமைப்பு திருத்தம், இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் 'சம நலசமுதாயம்' என்ற வார்த்தையைச் சேர்த்தது?

A. 26வது திருத்தம், 1971

B. 42வது திருத்தம், 1976 ✓

C. 1வது திருத்தம், 1951

D. 44வது திருத்தம், 1978

Q20 Constitutional amendments

எந்த அரசியலமைப்பு திருத்தம் ஆனது, தேசிய நெருக்கடிநிலைக்கான நாடாளுமன்றம் அங்கீகரிப்பதற்கான கால அவகாசத்தை இரண்டு மாதங்களிலிருந்து ஒரு மாதமாகக் குறைத்தது?

A. 52வது திருத்தச் சட்டம், 1985

B. 44வது திருத்தச் சட்டம், 1978 ✓

C. 42வது திருத்தச் சட்டம், 1976

D. 38வது திருத்தச் சட்டம், 1975

Q21 Constitutional amendments

எந்த அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அடிப்படைக் கடமைகள் ஆனது அரசியலமைப்பில் இணைக்கப்பட்டன?

A. 61வது திருத்தம், 1989

B. 52வது திருத்தம், 1985

C. 97வது திருத்தம், 2011

D. 42வது திருத்தம், 1976 ✓

Q22 Constitutional amendments

2016-இன் 101வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் பின்வருவனவற்றுள் எதனுடன் தொடர்புடையது?

A. சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் பழங்குடியினர் நல அமைச்சரை நியமித்தல்

B. இந்தியா மற்றும் வங்காளதேசத்திற்கு இடையே என்கிளேவ்களை (Enclaves) பரிமாறிக்கொள்வது மற்றும் பிற எல்லை மாற்றங்களை மேற்கொள்வது

C. இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரியை (GST) அறிமுகப்படுத்துதல் ✓

D. தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை (NJAC) அறிமுகப்படுத்துதல்

Q23 Constitutional amendments

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு (EWS) இடஒதுக்கீட்டை வழங்குவதற்காக, 103வது திருத்தச் சட்டம், 2019 மூலம் அரசியலமைப்பில் எந்த வகையகங்கள் (provisions) சேர்க்கப்பட்டன?

A. சட்டப்பிரிவு 15(5) மற்றும் 16(5)

B. சட்டப்பிரிவு 15(4) மற்றும் 16(4)

C. சட்டப்பிரிவு 15(6) மற்றும் 16(6) ✓

D. சட்டப்பிரிவு 15(2) மற்றும் 16(2)

Q24 Constitutional amendments

எந்தச் சட்டப்பிரிவு கூட்டுறவு சங்கங்களின் தொழில்முறை நிர்வாகத்தை ஊக்குவிக்கும் வகையில், 2011ஆம் ஆண்டின் 97ஆம் திருத்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது?

A. சட்டப்பிரிவு 48A

B. சட்டப்பிரிவு 43B ✓

C. சட்டப்பிரிவு 43A

D. சட்டப்பிரிவு 38

Q25 Constitutional amendments

24வது அரசியலமைப்பு திருத்தமானது, பாராளுமன்றத்திற்கு பின்வரும் எந்த அதிகாரத்தை வழங்கியது?

A. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இடைநிறுத்தல்

B. தேர்தல்களை இடைநிறுத்தல்

C. அடிப்படை உரிமைகளை திருத்துதல் ✓

D. நீதித்துறை சீராய்வை மீறுதல்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

Q26 Constitutional amendments

இந்திய அரசியலமைப்பின் எந்த அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கல்வி நிறுவனங்களில் OBCக்கு 27% இடஒதுக்கீடு வழங்கப்பட்டது?

A. எண்பத்தி ஆறாவது திருத்தம்

B. தொண்ணூற்று மூன்றாவது திருத்தம் ✓

C. தொண்ணூற்று நான்காவது திருத்தம்

D. தொண்ணூற்று ஏழாவது திருத்தம்

Q27 Constitutional amendments

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்குத் தாவுவதைத் தடுப்பதற்காக, கட்சித் தாவல் தடைச் சட்டத்தை (Anti-Defection Law) அறிமுகப்படுத்திய இந்திய அரசியல் அமைப்பின் 52-வது திருத்தச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

A. 1990

B. 1985 ✓

C. 1975

D. 1980

Q28 Constitutional amendments

இந்தியா மற்றும் வங்காளதேசத்திற்கு இடையேயான நில எல்லை உடன்படிக்கை (Land Boundary Agreement) எந்த அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் அரசியலமைப்பு அந்தஸ்தைப் (constitutionalized)பெற்றது ?

A. நூற்றி ஒன்றாவது திருத்தம்

B. தொண்ணூற்று எட்டாவது திருத்தம்

C. தொண்ணூற்று ஏழாவது திருத்தம்

D. நூறாவது திருத்தம் ✓

Q29 Constitutional amendments

97வது அரசியலமைப்புத் திருத்தமானது, பின்வரும் எதற்கு அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்கியது?

A. பெருநகர சபைகள்

B. கூட்டுறவுச் சங்கங்கள் ✓

C. மாவட்ட திட்டமிடல் குழுக்கள்

D. சந்தை ஒழுங்குமுறை வாரியங்கள்

Q30 Constitutional amendments

2009 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு (தொண்ணூற்று ஐந்தாவது திருத்தம்) சட்டம் மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றப் பேரவைகளில் (State Assemblies) பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் ஆங்கிலோ-இந்தியர்களுக்கான (Anglo-Indians) இட ஒதுக்கீட்டை எத்தனை ஆண்டுகளுக்கு நீட்டித்தது?

A. பதினைந்து ஆண்டுகள்

B. ஐந்து ஆண்டுகள்

C. இருபது ஆண்டுகள்

D. பத்து ஆண்டுகள் ✓

Q31 Constitutional amendments

இந்திய அரசியலமைப்பின் எந்தத் திருத்தம் யூனியன் பிரதேசமான டெல்லிக்கு சிறப்பு அந்தஸ்தை வழங்கியது, மேலும் அதை தேசிய தலைநகர் பிரதேசமான டெல்லி என்று மறுவடிவமைப்பு செய்தது?

A. 69வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ✓

B. 71வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்

C. 68வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்

D. 70வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்

Q32 Constitutional amendments

42வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் இந்திய அரசியலமைப்பில் பின்வரும் எந்த மாற்றங்கள் செய்யப்பட்டன?

A. சட்டப்பிரிவு 51A இன் கீழ் அடிப்படைக் கடமைகளானது அறிமுகப்படுத்தப்பட்டது ✓

B. நில உச்சவரம்புச் சட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டது.

C. இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 21 இல் தனியுரிமைக்கான உரிமை சேர்க்கப்பட்டுள்ளது.

D. மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை 525 லிருந்து 545 ஆக உயர்த்தப்பட்டன.

